[1981 மே 7

திரு. அ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, ஹெல்த் விசிட்டர்ஸ் எத்தனை ஆண்டுக்காலம் பயிற்சி பெறுகிறார்கள்? அவர்கள் பயிற்சி பெறுகின்ற தகுதியை வைத்து அவர்கள் எந்த அளவுக்கு மருத்துவத் துறையிலே பணியாற்ற முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, $1\frac{1}{2}$ ஆண்டுகள் அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. பி. துரைராஜ் : தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். சங்கரன்கோயில் பகுதியில் மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்த மக்கள் நிறைந்த பகுதியாக அது இருக்கின்றது. ஆகவே அங்கே ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்தித் தருவதற்கு அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்படி அத்தனை உறுப்பினர்களும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டும் என்று கேட்டால் அதற்கு பதில் சொல்ல இயலாது. ஆகவே இதற்கென்று ஒரு சில நார்ம்ஸ் வைத்திருக்கிறோம். அதாவது இத்தனை கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலே அதைச் செய்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஒவ்வொரு உறுப்பினரும் இவ்வாறு கேட்டுக்கொண்டிருப்பது உசிதமாக இருக்காது எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 1013—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் பல் மருத்துவர் (Dental Doctor) நீண்ட காலமாக நியமிக்கப்படாததற்கு என்ன காரணம் ?

(ஆ) மேற்படி மருத்துவமனைக்கு மேலும் 100 படுக்கைகள் கொண்ட கட்டிடத்திற்கு அரசு அனுமதி வழங்கியது உண்மையா?

(இ) ஆம் எனில் நிறைவேற்றாததற்கு என்ன காரணம்?

1981 மே 7]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே—(அ) முதுகுளத்தூர் அரசு மருத்துவ மனையில் பல் மருத்துவராக இருந்தவர் மாற்றம் கோரி மாறியபின் இங்கு நியமிக்கப்பட்ட பல் மருத்துவர்கள் பணியில் அவர்கள் சேராததினால் இந்த இடம் காலியாக உள்ளது. தற்போது கே. வி. சௌந்தரராஜன் என்பவரை அங்கே நியமனம் செய்துள்ளது.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே தற்போது ஒரு பல் மருத்துவர் அங்கே நியமிக்கப்பட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் விரைவிலே அங்கு சேர்ந்து பணி புரிவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இரண்டாவது கேள்விக்கு இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அங்கே 100 படுக்கைகளுக்கு மேற்பட்ட புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. ஆனால் நில ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அது கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. அந்த பகுதி மிகவும் பின்தங்கிய மக்கள் நிறைந்த பகுதி, அங்கே நூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகள் தரையிலே படுத்திருக்கிறார்கள். ஆகவே அங்கே மேற்கொண்டும் ஒரு கட்டிடம் கட்டுவதற்குரிய வகையிலே ஏற்பாடு செய்து நில ஆர்ஜிதம் செய்வதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்கிற புதிதான ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எனக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால் அதற்காகத்தான் அந்த வேலைகள் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறதா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. நிறுத்தப்பட்டிருப்பதற்கான விவரம் என்ன என்று ஆராய்ந்து தான் பார்க்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன காரணத்திற்காகத்தான் நிறுத்தப்பட்டிருக்கிறதா. அல்லது வேறு எதாவது காரணங்களுக்காக நிறுத்தப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேறு சாத்தியக் கூறுகளைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேட்பாரேயானால் அறிந்து பதில் சொல்லப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே போடப்பட்டிருந்த திட்டம் எப்படி இருந்தாலும், இப்பொழுது அங்கே 100 படுக்கைகள் கொண்ட மருத்துமனை கட்டிடம் அவசியம் தேவை என்பதை அரசு உணர்ந்து, அதை நிறுவ ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், இதுபோன்ற கேள்விகளுக்கெல்லாம் நான் கேள்வி நேரத்திலே பதிலுரைக்க முடியாது என்று.

மேல் சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

*வினா எண். 1014—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், மேல்சித்தாமூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக புதிய கட்டிடம் கட்ட திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல்சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கான மருந்தகக் கட்டிடம் மட்டுமல்லாமல், பணியாளர் குடியிருப்பு இல்லங்கள் மற்றும் சுற்றுச் சுவர் அதாவது காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு அரசு ஆணை இடப்பட்டு, கட்டிட வேலைகள நடந்துக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல் சித்தாமூரில் புதுதாக மருத்துவ மனைக்கு கட்டிடம கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்திருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதேபோல எல்லா பிரதம சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடங்கள் கட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பார்ட் II ஸ்கீம், என்ற ஸ்கீமின் அடிப்படையில், 1979–80 ஆம் ஆண்டில் ஜி.ஓ. எம். எஸ். நெ. 2159, 11—12—1979 ஆம் நாளன்று உத்தரவுகள் இடப்பட்டிருக்கின்றன. 20 பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குத்தான் இந்த உத்தரவுகள் கொடுக்கப்பட்டிருக்